**தலைப்பு 161 – நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016**

---

தலைப்பு 161 - 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள் பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 18 ஆந் திகதி வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 274.54 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 223.42 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 51.12 மில்லியன் அதாவது 18.62 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 174.36 | 166.31 | 8.05 | 4.62 |
| மூலதனம் | 100.18 | 57.11 | 43.07 | 42.99 |
| மொத்தம் | **274.54** | **223.42** | **51.12** | **18.62** |

## 2.2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 16101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 5.00 | 3.80 | 2.00 | 3.10 | 25.00 | 8.87 |

## 2.3 கட்டுநிதி கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழான 7002/0000/00/418/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.54 மில்லியனாக ஆக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கீழான 03 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகைரூபா 27.667 மில்லியனாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0013/0104/000 | 27.554 |
| 6000/0000/00/0016/0097/000 | 0.059 |
| 6000/0000/00/0018/0100/000 | 0.054 |
| மொத்தம் | 27.667 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.1.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 செலவின விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் 12 சதவீதத்திற்கும் 55 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சிளவினைக் கொண்டிருந்தது.

(ஆ) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்கான பெறுகை செயற்பாடு, அரச நிதித் திணைக்களத்திற்கும் பெறுகை ஆணைக்குழுவிற்கும் தொடர்படுத்தியதன் மூலம் ஏற்பட்ட தாமதம் காரணமாக மீளாய்வாண்டில் அமைச்சருக்கு உத்தியோகபூர்வ வாகனமொன்றை கொள்வனவு செய்ய முடியாததன் பேரில் மேற்குறித்த மூலதன செலவின சேமிப்புக்களிலிருந்து 35 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.2 கட்டுநிதி கணக்கு

(அ) கட்டுநிதி மீதான பொழிப்பறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு தீர்க்கப்படாதிருந்த உப கட்டுநிதி மீதி ரூபா 29,000 ஆக இருந்தது.

(ஆ) எதிர்பார்க்கப்பட்ட செலவினம் மிகவும் சரியாக மதிப்பீடு செய்யப்படாததன் காரணமாக 03 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 92,850 ஆன மேலதிக தொகை தொகையொன்று முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பொது வைப்பு கணக்கில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியிளவில் 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 25,507,730 கூட்டுத்தொகையான வைப்புக்கள் காணப்பட்டன. அதில் ரூபா 25,000,000 நிர்மாண வேலையொன்றுக்கு அரச கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு செலுத்த வேண்டிய தொகையாக இருந்த போதும் திறைச்சேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து கட்டுநிதி விடுவிக்கப்படாமையால் தீர்க்கப்படாத மீதியொன்றாக இருந்தது. எஞ்சிய ரூபா 507,736 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் ஓய்வுடிபற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 414,275 ஆக காணப்பட்டது. அதில் ஓராண்டினை விஞ்சிய தீர்வுசெய்யாமல் காணப்பட்ட ரூபா 295,691 ஆன மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

#### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

அமைச்சிற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று 02 1/2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றோ அல்லது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சிற்குச் சொந்தமான ஏனைய26 சொத்துக்கள் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டன.

#### (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

விளையாட்டு அமைச்சு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த அமைச்சிற்குச் சொந்தமான 05 வாகனங்கள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சிற்கு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (இ) ஏனைய நிறுவனங்களிடமுள்ள சொத்துக்களை முறையற்ற பயன்படுத்துதல்

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சில வாகனங்கள் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் உரித்தாக இருந்த நிறுவனம் | எண்ணிக்கை | காலப்பகுதி |
|---|---|---|
| கெமிதிரிய மன்றம் | 01 | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |
| சுற்றுலா அமைச்சு | 01 | |

| | |
|---|---|
| பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 01 |
| பொது நிர்வாக மற்றும் சனநாயக நிர்வாகம் தொடர்பான இராசாங்க அமைச்சு | 02 |
| வனசீவராசிகள வளங்கள் பாதுகாப்புத் திணைக்களம் | 01 |
| ஆரசியலமைப்பு மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு | 01 |
| | ------------- |
| | 07 |
| | ======= |

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுது போக்குகள் அலுவல்கள் அமைச்சு மற்றும் வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சு அமைச்சிற்குச் சொந்தமான 08 வாகனங்கள் புதிய அமைச்சினால் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத 01 ஆண்டிற்கு குறைவான காலப்பகுதியிலிருந்து வரும் பொறுப்புக்கள் ரூபா 1,090,208 ஆக இருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 08 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை விஞ்சி பொறுப்புக்கள் ரூபா 578,620 ஆன பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணங்காமை**

2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் அமைச்சர் மற்றும் பதவியணிக்கு உரித்தாகும் ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்கள் இணைக்கப்பட்டிருக்கையில் குழாம் வாகனமொன்று அமைச்சரினதும் அமைச்சு அலுவலகத்திற்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

**3.7 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பணிகள்

அமைச்சினால் 2016 ஆம் ஆண்டின் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட தனது பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) நிரந்தர அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் தந்திரோபாயம் தயாரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவது மற்றும் நிரந்தர அபிவிருத்தி மற்றும் செயற்படுத்துவதற்காக சட்டரீதியான சட்டகமொன்றை தயாரிப்பதற்காக இலங்கை நிரந்தர அபிவிருத்தி சட்டம் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றிக் கொள்ள முடியாதிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பாக அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நடாத்தப்பட்ட நிரந்தர அபிவிருத்தி செயலமர்வுகள், கூட்டங்கள் மற்றும் வெளிநாட்டு செயலமர்வுக்காக சமூகமளித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2016 ஆம் ஆண்டில் ரூபா 13,660,540 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iii) மத்திய மாகாணம் தவிர ஏனைய மாகாணங்கள் அல்லது பிரதேச மட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டில் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை** | **உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 13 | 8 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 53 | 39 | 14 |
| (iv) | ஆரம்ப நிலை | 32 | 26 | 06 |
| | மொத்தம் | 109 | 81 | 28 |

மீளாய்வாண்டின் இறுதியில் 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், இதில் நிலைபேறான அபிவிருத்திப் பிரிவிற்கான 12 அங்கீகரிக்கப்பட்ட முழுப் பதவியணியும் வெற்றிடங்களாக இருந்தன.